Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. சிலோனில் ,, ரூ. 0-2-0

மாலை 17 } ஈரோடு, 8-7-1944 ஆனி-மீ 24உ { மலர் 39

## இரண்டும் ஒன்றே

### கந்தப்புராணமும் இராமாயணமும்

(மணியம்மை)

கந்தப்புராணமும், இராமாயணமும் ஒரே கருத்தை இரண்டு விதமாக சைவத்திற்கும் வைணவத்திற்கும் பயன்படும்படியாக ஆரியர்களால் எழுதப்பட்டவை என்றும், எது போல் என்றால், வைணவர்களுக்கு ஆழ்வாராதிகளையும், தாசர்களையும் பற்றிய குரு பரம்பரை, பக்த லீலா மிருதம், பாகவதம், நாலாயிரப் பிரபந்தம் முதலாகியவைகள் இருப்பது போலும், சைவர்களுக்கு சமய குரவர்களையும் நாயன் மார்களையும் பற்றிய பெரிய புராணம் திருவிளையாடல், புராணம் முதலியவைகள் இருப்பது போலும், வைணவ பக்தர்களில் குயவகுப்பில் ஒரு கோரா கும்பார் இருந்தால் சைவ நாயன்மார்களிலும், குயவகுப்பில் ஒரு திருநீலகண்டரும், வைணவ பக்தரில் தீண்டப்படாத வகுப்பில் ஒரு சொக்க மேளா இருந்தால், சைவ நாயன்மார்களில் ஒரு நந்தன் இருப்பது போலவும் காட்டி, இருவர்கள் கதையும் ஒரே மாதிரியாக எழுதப்பட்டிருப்பது போல் கந்தப்புராணமும், இராமாயணமும் ஒரே கருத்தை வைத்து கந்தன், இராமன் என்று இரண்டு ஆள்களை கற்பனை செய்து அவர்கள் கதையாக எழுதப்பட்டவை என்று பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சுமார் 15 வருஷ காலமாகச் சொல்லியும் எழுதியும் வருவது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

இப்போது இராமாயணம், பெரிய புராணம் முதலிய ஆரியக் கற்பனைக் கதைகள் எரிக்கப்பட வேண்டும் என்று பெரியார் கிளர்ச்சி செய்வதைப் பற்றி, சில தமிழர்கள் ஆரியமதப் பற்றின் காரணமாக சங்கடப்பட்டு எதிர்பிரசாரம் செய்வதால், அப்படிப்பட்ட அவர்கள் பிரசாரத்தால் தமிழ் மக்கள் ஏமாந்து போகாமல் இருக்கும்படியாக, இந்த "இரண்டும் ஒன்று" என்கின்ற கட்டுரையை எழுதுகிறேன்.

இக்கட்டுரை பெரிதும் மேற்காட்டிய சைவவைணவ நூல்களில் இருந்தும் சிறப்பாக புலவர் ஆர். பி. சேது பிள்ளை அவர்கள் சமீபத்தில் எழுதிய வேலும்—வில்லும் என்ற சிறு புத்தகத்திலுள்ளதைக் கொண்டும் தொகுத்ததாகும்.

இந்த விஷயங்களை சிறிது ஆராய்ச்சிக் கண்களுடன் பார்த்தால் அதாவது இராமாயணம், ஸ்கந்தம் என்னும் கந்தப் புராணம் ஆகிய இரண்டு நூல்களும் வடமொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, கம்பன் என்னும் ஒரு உச்சன் என்னும் (திருவழுந்தூரில் கோயில் பூசை செய்யும் ஒரு பூசாரி மகனாய் பிறந்த) ஒரு பூசாரியால் பாடப்பட்ட கம்ப இராமாயணத்தையும்,

காஞ்சீபுரம் கந்தக்கோட்டத்து சுப்ரமணியன் கோவில் அர்ச்சகராகிய கச்சியப்ப சிவாச்சாரி என்னும் ஒரு பார்ப்பனனால் பாடப்பட்ட கந்தப் புராணத்தையும், நடுநிலையில் இருந்து பார்த்தால் எப்படிப்பட்ட சாதாரண மகனுக்கும் பெரியார் சொல்லி வந்தது மிக மிக சரியானதும் உண்மையானதும் என்பது எளிதில் விளங்கும்.

இன்று நமது நாட்டில் தீவிரமாக கிளம்பியுள்ள கம்ப இராமாயண வெறுப்புக் கிளர்ச்சிக்கும், அதன் எதிர்ப்புக்கும், இந்த ஆராய்ச்சி பெரிதும் பயன்படலாம் என்று கருதி, பெரியார் சொல்லி வந்த மேற்கண்ட கூற்றை விளக்கிக்காட்டலாம் என்கின்ற ஆசையின் மீது, சில உண்மைகளை இந்த வியாசத்தில் விளக்கவும், இக்கட்டுரையை மேலே கண்ட தலைப்பின் கீழ் எழுதவும் ஆசைப்படுகிறேன்.

நான் எழுதுவது முழுவதும் என் ஆராய்ச்சியில் கண்டது என்பது மாத்திரமல்லாமல் பெரிதும் பல அறிஞர்களும், புலவர்களும், கண்டவற்றையும் சேர்த்துத் தொகுத்தே எழுதுகிறேன் என்பதை வாசகர்களுக்கு முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அன்றியும் எப்படிப்பட்ட சங்கதியானாலும், அது யாரால் எழுதப்பட்டதானாலும் அவை உண்மையா இல்லையா? அவற்றிற்கு ஆதாரம் இருக்கிறதா இல்லையா? என்று பார்த்துத் தெரிய வேண்டியதே நடுநிலைமையோரின் கடமையாதலால் என் மீது காய்தல் உவத்தல் இன்றி உண்மை கண்டு தேர்வுற வேண்டிக் கொள்ளுகிறேன்.

### இரண்டிற்கும் உள்ள ஒற்றுமை.

#### உற்பத்தி

1. கந்தப் புராணமும் இராமாயணமும் வடமொழியில் உள்ள மூலக் கதைகளைக் கொண்டதாகும்.

2. இரண்டு மூலமும் ஆரியர்களால் உண்டாக்கப்பட்டவையேயாகும்.

3. இரண்டு கதைகளும், ஆரிய சமைய கொள்கைகளை வலியுறுத்துவதைக் கருத்தாய்க் கொண்டு, ஆரியக் கடவுள்களை பெருமைப்படுத்த ஏற்படுத்தியவையாகும்.

4. இரண்டு கதைகளும், தேவர்கள் என்பவர்களுக்கும் அசுரர்கள் என்பவர்களுக்கும் நடந்த போராட்டங்கள் என்ற பாவனை வைத்து கற்பிக்கப்பட்டவையாகும்.

5. இரண்டு கதைகளும், தேவர்கள் என்பவர்களை உயர்த்தியும் அசுரர்கள் என்பவர்களைத் தாழ்த்தியும், இழித்தும் காட்டப்படுபவைகளாகும் என்பதோடு இரண்டு கதைகளுக்கும் இந்திரன் பிரதானப்பட்டவனாகிறான்.

6. இரண்டு கதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு காவியங்களும் இரண்டு கோவில் அர்ச்சகர்களால், அதாவது கோவில் பூசை செய்யும் பூசாரிகளால் பாடப்பட்டவையாகும். கந்தப் புராணம் கச்சியப்பசிவாச்சாரி என்னும் அர்ச்சகராலும், இராமாயணம் கம்பன் என்னும் பூசாரியாலும் தமிழில் பாடப்பட்டது.

#### காரணம்

7. இரண்டு கதை உற்பத்திக்கும் காட்டப்பட்ட காரணங்கள் அசுரர்கள் தொல்லைகள் பொறுக்கமாட்டாமல் தேவர்கள் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் கடவுள்களைப் பிரார்த்தித்து தங்கள் துன்பங்களைத் தீர்க்கும்படி வேண்டிக்கொண்டவைகளாகும்.

8. இராமாயணக் கதைக்கு விஷ்ணு இராமனாக அவதரித்த அதாரமாகவும், கந்தப் புராணத்திற்கு சிவன்

கந்தனாக (சுப்ரமணியனாக) பிறந்து கதாநாயகனாகவும் இருக்கிறார்கள்.

9. இரண்டு கதாநாயகர்களுடைய பிறப்பும் அருவருக்கும் தன்மையாகவே, அதாவது, இராமன் தனது தாய் கௌசலை, யாகத்தின் போது குதிரையுடன் ஒரு இரவெல்லாம் கட்டித் தழுவிப் படுத்திருந்து, பகலெல்லாம் யாகப் புரோகிதனுடன் சேர்ந்திருந்து கர்ப்பமாகி இராமன் பிறந்ததாகவும்;

கந்தன், தன் தகப்பன் (சிவன்) தன் தாயை (பார்வதியை) பல ஆண்டுகள் இடைவிடாமல் புணர்ந்து, தேவர்கள் விருப்பப்படி இடைவெளியில் வீரியத்தை விட்டு அது கங்கையில சேர்ந்து அங்கு பல பிரிவாகி, குழந்தை உருக்கொள்ள, அதை பல பெண்கள் வளர்க்க, அதனால் ஆறுமுகம் பெற்று ஆறுமுகனானான், கார்த்திகையானானான். )இந்த சேதிகளை இராமாயணமே கூறுகின்றது) என்பதாகவும் இருக்கிறது.

10. இவ்விரண்டு கதாநாயகர் (இராமன்-கந்தன்) மனைவிமார்களும் தங்கள் பிறப்பை அறியமுடியாதவர்கள்.

அதாவது இராமனின் மனைவி சீதையை யாரோ பெற்று பூமியில் போடப்பட்டு, பழுதியில் மறைந்து கிடந்த, ஒரு அன்னிய அரசனால் கண்டெடுத்து வந்து வளர்க்கப்பட்டவள்.

கந்தன் மனைவி வள்ளியும் யாராலோ பெறப்பட்டு, காட்டில் ஒரு குழியில் கிடக்கப்பட்டு, ஒரு வேடராஜனால் கண்டெடுத்துக் கொண்டுபோய் வளர்க்கப்பட்டவள்.

11. இராமனுக்கு சீதை (விஸ்வாமித்திரன் என்னும்) ஒரு ரிஷியினால் கூட்டி வைக்கப்படுகிறாள். கந்தனுக்கு வள்ளி (நாரதன் என்னும்) ஒரு ரிஷியினால் கூட்டி வைக்கப்படுகிறாள்.

12. இராமனுக்கு எதிரி (இராவணன் என்னும்) தேவர்கள் விரோதி; தேவர்களை அடக்கி ஆள்பவன். கந்தனுக்கு எதிரி (சூரபத்மன் என்னும்) தேவர்கள் விரோதி, தேவர்களை அடக்கி ஆண்டவன்.

13. இராமனுக்கு ஆயுதம் வில்லு. கந்தனுக்கு ஆயுதம் வேல்.

14. இராவணனும் மகா தவசிரேஷ்டன். மகாபலசாலி, வீரன். மாபெரும் வரப்பிரசாதி.

சூரபத்மனும் மகாதவசிரேஷ்டன். மகா பலசாலி. வீரன். மாபெரும் வரப்பிரசாதி.

15. இராமனுக்கு லட்சுமணன் என்கின்ற ஒரு சகோதரன்உதவிசெய்கிறான்.

கந்தனுக்கு கணபதி என்கின்ற ஒரு சகோதரன் உதவி செய்கிறான்.

16. இராவணனுக்கு சூர்ப்பனகை என்ற ஒரு தங்கை இருக்கிறாள்.

சூரபத்மனுக்கு அசமுகி என்கின்ற ஒரு தங்கை இருக்கிறாள்.

17. இராவணனுக்கு இந்திரஜித் என்னும் (மேகநாதன் என்ற) மகன் இவன் மகாபலசாலி. வீரன்.

சூரபத்மனுக்கு பானுகோபன் என்கின்ற ஒரு மகன். இவன் மகாபலசாலி.

18. இராவணனுக்கு விரோதமாக இராவணன் தம்பி விபீஷணன் என்பவன் இருந்து கொண்டு, எதிரியைப் புகழ்ந்து, சீதையை விடும்படி கூறி எதிரிக்குக் காட்டிக் கொடுக்க நாட்டை விட்டுப் போய்விடுகிறான்.

சூரபத்மனுக்கு விரோதமாக சூரபத்மன் தம்பி சிங்கமுகன் என்பவன் எதிரியைப் புகழ்ந்து பேசி, சயந்தனை சிறை விடும்படி கூறி எதிரிக்கு அனுகூலமாக நாட்டை விட்டுப் போய்விடுகிறான்.

19. இராவணன் மகன் இந்திரஜித்து இராமனைப் புகழ்கிறான்.

சூரபத்மன் மகன் பானுகோபன் சயந்தனைப் புகழ்கிறான்.

20. இராவணனிடம் தூதனாக அனுமான் சென்று இலங்கையை அழித்து விட்டு வருகிறான்.

சூரபத்மனிடம் தூதுவனாக வீரவாகு சென்று வீரமா மகேந்திரத்தை அழித்து விட்டு வருகிறான்.

21. இராவணன் தங்கையின் மூக்கையும், காதையும் லட்சுமணன், அவள்தலை மயிரை இழுத்துக் கீழே போட்டு அழுத்தி துண்டிக்கிறான்.

சூரபத்மன் தங்கை அசமுகியின் கைகளை மாசானன் என்பவன் அவள் மயிரை இழுத்துக் கீழே போட்டு துண்டிக்கிறான்.

22. சூர்ப்பனகை சீதையை இராவணனிடம் சேர்க்க முயற்சிக்கிறாள். அசமுகி இந்திராணியை சூரபத்மனிடம் சேர்ப்பிக்க முயற்சிக்கிறாள்.

23. சூர்ப்பனகை, மூக்கு, காது அருபட்டவுடன் அண்ணன் இராவணனிடம் போய் 'என்னை இப்படி செய்துவிட்டானே, உனக்கு வெட்கமில்லையா?' என்று அழுகிறாள்.

அசமுகி கை அருபட்டவுடன் அண்ணன் சூரபத்மனிடம் போய் 'என்னை இப்படி செய்துவிட்டானே உனக்கு வெட்கமில்லையா', என்று அழுகிறாள்.

24. அதற்கு ஆக கோபப்பட்டு இராவணன் இராமனுடன் சண்டைக்குப் போகிறான்.

அதற்கு ஆகவேண்டியே சூரபத்மன் ஆத்திரப்பட்டு கந்தனுடன் சண்டைக்குப் போகிறான்.

25. இராமனுக்கு சுக்கிரீவன், அனுமார், அங்கதன், நீலன், சாம்புவந்தன் முதலியவர்கள் உதவி செய்கிறார்கள்.

சூரனுக்கு நவவீரர்கள் உதவி செய்கிறார்கள்.

இராமனை மூலபலம் எதிர்க்கின்றது என்றும் சூரனுக்கு ஒரு அரக்கி வயிற்றில் வெட்டவெட்ட அசுரர்கள் பிறக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

(தொடரும்)

## சேந்தமங்கலத்தில் திருமுறை விழா

### பண்டித மணியின் 2வது தந்திரம்

தோழர் கதிரேசஞ் செட்டியார் தலைமையில் டை விழா ஆனி 17, 18, 19ம் (ஜூன் 30, ஜூலை 1, 2) நாட்களில் நடைபெற்றது. நாமக்கல் இளைஞர்களால் 24 கேள்விகள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் 1000த்திற்கு மேல் வழங்கப்பட்டன. கதிரேசருக்கு 23-6-44 ஆந்தேதியிலேயே தபால் மூலமாக டை கேள்விகள் அனுப்பப்பட்டன. நேரிலும் கேள்வித்தாள்கள் கொடுக்கப்பட்டன. அவைகளுக்கு பதில், சென்னை கோகலே ஆலில் செய்ததுபோலவே, 'சொல்லுகிறேன்' 'சொல்லுகிறேன்' என்று சொல்லிக்கொண்டு இரண்டாம் நாள் தலைவர் போய் விட்டார். கடைசி வரை பதில் சொல்லப்படவேயில்லை. நகர் முழுவதும் பெரிய பண்டிதர் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் நழுவி விட்டாரே என்றபேச்சாகவேஇருக்கிறது

இதற்கு மறுப்பு மாநாடு கூடியவிரைவில் நடத்துவதாக நாமக்கல் தோழர்கள் தீர்மானித்திருக்கின்றனர். அதற்கு ஆலோசனைக்கூட்டம் வருகிற 9-7-44 ஆந்தேதி ஞாயிற்றுக்கிழமை நாமக்கல் கணேசபுரம் சங்கக்கட்டிடத்தில் கூடுவதாகத் தீர்மானித்திருக்கிறது டை கூட்டத்திற்கு இயக்கத்தோழர்கள் அனைவரும் வரும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கே. கருப்பண்ணன், செயலாளர்,
நாமக்கல் திராவிட இளைஞர் சங்கம்.

## யுத்த ஆதரவு கூட்டம்

ஈரோடு: 1-7-44-ஆந் தேதி மாலை ஈரோடு டவுன் எலிமெண்டரி பாடசாலையில் ஜில்லா ஜட்ஜ் ராவ்சாஹிப் சி. என். செனத்ரி அவர்கள் தலைமையில் நடந்த தேசிய போர் முன்னணிக் கூட்டத்தில், சர்க்கார் பத்திரங்களில் பணத்தைப் போட்டுவைக்க வேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது. டிபுடி கலெக்டர் தோழர் ரத்னம் பேசினார். ரெவரண்டு எச். ஏ. பாப்ளி நன்றி கூற கூட்டமுடிந்தது.

## இன்னிசை விருந்து

ஈரோடு: 2-7-44-ஆந் தேதி மகாஜன ஹைஸ்கூல் சரஸ்வதி ஹாலில் ஈரோடு சங்கீதாபூஷணம் தோழர் ஈ. வி. லக்ஷ்மணசாமி ஓர் இனிய இசை விருந்தளித்தார். மைசூர் தோழர் பிடில் டி. குருராஜப்பாவும், திருகோகர்ணம் மிருதங்கம் மீனாட்சிசுந்தரமும் கச்சேரியை அழகு படுத்தனர். தோழர் எஸ். மீனாட்சிசுந்தரமுதலியார் பி. ஏ., எல். டி. அவர்கள் தோழர் லக்ஷ்மணசாமி அவர்களைப் பாராட்டிப் பேசினார்.

# ஜுலை மாதத்தில் தமிழ் நாட்டில் மாநாடுகள்

### திருநெல்வேலி ஜில்லா

ஜுலை 8, 9-ஆம் தேதிகளில் அத்தக்குடியில் திருநெல்வேலி ஜில்லா திராவிட இளைஞர் மாநாடு அத்தக்குடி ஷண்முகபுரத்தில் போடப்பட்ட 'டாக்டர் நாயர்' பந்தலில் தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பெரியார், நெடுஞ்செழியன், ஜனார்த்தனன், எஸ். கே. சாமி, பாவலர், மணி, பொன்னம்பலம், அண்ணாதுரை முதலியவர்கள் வருகிறார்கள்.

### தஞ்சை ஜில்லா

11-7-44-ஆம் தேதி தஞ்சை ஜில்லா திராவிட வாலிபர் மாநாடு தஞ்சையில் நடைபெறும். தோழர்கள் டபுள்யு. பி. ஏ. சௌந்திரபாண்டியன், பெரியார், நெடும்பலம், என். எஸ். ஆர். ராமலிங்கம், ராவ்பகதூர் வி. வி. ராமசாமி நாடார், ஆகியோர்கள் முறையே, தலைவர், திறப்பாளர், கொடியேற்றுபவர், திராவிடநாடு படத்திறப்பாளராக இருப்பார்கள். தோழர்கள் நீலமேகம், அண்ணாதுரை முதலான பல இயக்கத் தோழர்கள் வருவார்கள்.

### திருச்சி ஜில்லா

திருச்சி ஜில்லா சுயமரியாதை மாநாடு 16-7-44 திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் நடைபெறும். தோழர்கள் புரட்சிக்கவி பாரதிதாசன், பெரியார், திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமணியம் ஆகியவர்கள் முறையே தலைவர், திறப்பாளர், கொடியேற்றுபவர்களாவார்கள். தோழர் டி. பி. வேதாசலம் [illegible] கழகத் தலைவர். அண்ணாதுரை முதலிய எல்லா சுயமரியாதைத் தோழர்களும் வருவார்கள்.

### ஓமலூர் தாலுகா திராவிட இளைஞர் மாநாடு

சேலம் ஜில்லா ஓமலூர் தாலுகா திராவிட இளைஞர் மாநாடு ஜலகண்டபுரத்தில் 22-7-44-ல் இளையகுமார பட்டக்காரர் தோழர் அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் ஜே. பி. கிருஷ்ணன் வரவேற்புக் கழகத் தலைவர். பெரியார், அண்ணாதுரை முதலியவர்கள் வருவார்கள். மற்ற விபரங்கள் பின்னால் வெளியாகும்.

### சென்னை சுயமரியாதை மாநாடு

சென்னை நகர சுயமரியாதை மாநாடு 31-7-44-ஆம் தேதி செயசேன [illegible] ஹாலில் நடைபெறும். தோழர் கும்பகோணம் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடக்கும். சேலம் [illegible]

பால் ராமசாமி கவுண்டர் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் கனகம்மை அவர்களும், கும்பகோணம் தோழர் சின்னத்தம்பி அவர்களும் திறப்பாளராகவும், கொடி உயர்த்துபவராகவும், பெரியாரும், அண்ணாதுரையும் முக்கிய சொற்பொழிவாளர்களாகவும் இருப்பார்கள்.

### தென்னாற்காடு ஜில்லா

தென்னாற்காடு ஜில்லா திராவிட மாநாடு 29-7-44-ல் திருப்பாபுலியூர் முத்தையா ஹாலில் நடைபெறும். ராவ்பகதூர் வி. வி. ராமசாமி நாடார், பெரியார், அண்ணாதுரை, ஜனார்த்தனன், மணி, முதலிய பலர் தலைமைக்கும், மற்ற பணிகளாற்றவும் வேண்டிக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஆகஸ்ட் மாத மாநாடுகள் பற்றி பின்னால் வெளிவரும்.

---

### கலைக் கழகம்
(குமணன், மாணவன்)

தில்லை இராமசாமி செட்டியார் பள்ளியில் இதுவரை மாணவர் கழகத்தில் ஒன்று தமிழிலும், பிறிதொன்று ஆங்கிலத்திலும் நடந்து வந்தது. இது ஒழுங்கான முறையில் நடக்காததால் அதை 'மாணவர் கலைக் கழகம்' என்று பெயர் மாற்றி ஒன்றாக்கி தமிழில் நடத்த வேண்டும் என்று மாணவரில் பெரும்பாலோர் விழைகிறார்கள். தலைமையாசிரியர் விழைவனைத்திற்கு விரைவிலே ஆவன செய்வார் என நம்புகிறேன்.

### நன்றி

திருச்சியில் நடந்த மாகாண மருத்துவகுல மாநாட்டை சிறப்புற நடத்திக் கொடுத்த தலைவர்கள், தொண்டர்கள், சொற்பொழிவாளர்கள் முதலியவர்களுக்கு காரியதரிசி தோழர் மாணிக்கம் நன்றி செலுத்துகிறார்.

* * *

மாயவரம்: 21-6-44-ஆம் தேதி மாயவரம் பார்க்கில் தோழர் கெ. இலக்குமிகாந்தம் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகத்தினரால் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் சி. பி. சின்னராசு, கே. கே. நீலமேகம், பாவலர் பாலசுந்தரம், எஸ். கே. சாமி ஆகியோர்கள் "திராவிட நாடு பிரிவினை" என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

* *

24-6-44-ல் திருவண்ணாமலை [illegible] கழகத்தின் [illegible] தோழர் வி. [illegible] செட்டியார் அவர்கள் தலைமையின் கீழ் [illegible]

## இந்துமத பரிபாலன போர்டு

### துணைக் கமிஷனர்கள் நியமனம்

சென்னை: இந்துமதப் பரிபாலன போர்டில் துணைக் கமிஷனர்களாக 10 பேர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் எனத் தெரிகிறது. இப்பதவிகளில் ஐந்து, போர்டில் இப்போது உத்தியோகம் வகித்து வரும் ஜி. எஸ். ராமானுஜம், எம். பரமசிவத் தேவர், ஜி. வி. கிருஷ்ணமூர்த்தி, என். வெங்கடகிருஷ்ணய்யா, கே. சந்திரசேகர நம்பியார் ஆகியவர்களுக்கும், மற்றவைகள் ஸ்ரீரங்கம் தேவஸ்தான மானேஜர் பி சுப்பிரமணியம், மதுரை அட்வகேட் ஏ. சக்கரை சேர்வை, காளஹஸ்தி செகந்பண்ணை ஸ்பெஷல் ஆபீசர் ராவ்சாகிப் பி. ரங்கய்யா, அட்வகேட் எஸ். நாராயணராவ், மலபார் அட்வகேட் கே. கிருஷ்ண உண்ணி முதலியவர்களுக்கும் கிடைக்குமென்றும் பேசிக்கொள்ளப்படுகிறது.

## தாழ்த்தப்பட்டோருக்கு விஞ்ஞானக் கல்வி

புதுடில்லி: வருடத்திற்கு 3 லட்ச ரூபாய் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் மெட்ரிகுலேஷனுக்கு மேல், விஞ்ஞானம், டெக்னிகல், கல்வி கற்பதற்கு மான்யம் ஒதுக்குவது என்று இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. இந்த ஏற்பாடு உடனே அமுலுக்கு வரும் என்றும், 1944-ஆம் வருடத்திய ஆரம்பமாகும் படிப்புகளுக்கு மனு செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

மாணவர்களுக்கு சம்பளம், புஸ்தகம், சாப்பாட்டுச் செலவு ஆகிய எல்லாம் மான்யமாக கொடுக்கப்படும். வெளிநாடுகளில் சென்று படிக்கவும் வசதி உண்டு. மாணவர்கள் கல்வி டைரக்டர் மூலம் மனுச்செய்து கொள்ளலாம்.

## திருமணம்

வட சென்னை சுயமரியாதைத் தோழர் எம். கே. டி. சுப்பிரமணியத்திற்கும் தேனி வணங்காமுடி மைன்டிங் புரோப்ரைட்டர் தோழர் ஏ. எம். குருசாமி நாடார் சகோதரி ராஜம்மாளுக்கும் தேனியில் 22-6-44-ஆம் தேதி திருமணம் தோழர் டி. வி. நாராயணசாமியால் நடத்தி வைக்கப்பட்டது.

* * *

பம்பாய்: பம்பாய், தாராவி, தமிழ் நாடு பகுத்தறிவு நிலையத்தின் 2-வது பிரசாரக் கூட்டம் 2-7-44-ஆம் தேதி மாலை 7 மணிக்கு ஏ. ஆர். பி. [illegible] யில் தோழர் எல. டி. [illegible]தாசன் தலைமையில் நடைபெற்றது. திராவிடநாடு பிரிவினையின் அவசியத்தைக் குறித்து பல தோழர்கள் பேசினார்கள்.

## ராசிபுரத்தில் "பெரியார் மாளிகை"

தோழர் காவேரி நாயுடு அவர்களால் கட்டப்பட்ட இல்லத்திற்கு "பெரியார் மாளிகை" என பெயரிடப்பட்டது. அதை 28-6-44 அன்று பஞ்சாயத்து போர்டு உதவி தலைவர் தோழர் எம். எஸ். பி. சுப்பராய செட்டியார் அவர்கள் திறந்து வைத்தார். டை விழாவிற்கு பெரியாரும், சேலம் சேர்மன் தோழர் ரத்தினசாமி அவர்களும் வந்திருந்தார்கள்.

## சேலம் ஜில்லா காளப்ப நாயக்கன்பட்டியில் சு. ம. திருமணம்

காளப்பநாயக்கன்பட்டியில் சேலம் சேர்மன் ரத்தினசாமி அவர்கள் தலைமையில் பெரியார் அவர்கள், தோழர் வஸ்தாத் அப்பாய் நாயுடு மகள் தனலட்சுமிக்கும் பாலசாமி நாயுடு மகன் சுப்பா நாயுடுவுக்கும் 28-6-44-ஆந்தேதி காலை 11 மணிக்கு வாழ்க்கை ஒப்பந்தம் நடத்திவைத்தார். தலைவர் சேர்மன் ரத்தினசாமி அவர்களும், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் பாவலர் பாலசுந்திரம் அவர்களும் தன்னுணர்வுத் திருமணத்தின் அவசியத்தைப் பற்றி விரிவுரையாற்றினார்கள். தோழர் பேருகுரிச்சி மிட்டாதார் சோமசுந்திரம் அவர்கள் நன்றிகூறலுடன் மணவிழா இனிது நடந்தேறியது. தோழர் அப்பாய் நாயுடு பெரியதொரு சமபந்தி விருந்து நடத்தினார். சுமார் 2000 பேர்கள் மூன்றில் ஒருபங்கு பெண்களுடன் கூடியிருந்தார்கள். மணமக்கள் கதர் உடை தரித்திருந்தார்கள்.

## ராசிபுரத்தில் பெரியார்

ராசிபுரம்: தோழர் காவேரி நாயுடு அவர்களின் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்ட 'திராவிட இலவச வாசகசாலை' 'பெரியார் மாளிகையில்' தோழர் சித்தப்ப செட்டியார் அவர்கள் தலைமையில், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் 28-6-44 மாலை திறந்து வைக்கப்பட்டது.

அடுத்தபடி தோழர்கள் திவான் பகதூர் எஸ். எல்லப்ப செட்டியார் அவர்கள் "பன்னீர் செல்வம்" படத்தையும், பி. டி. என். மாரிமுத்து அவர்கள் 'பெரியார்' படத்தையும், மிட்டாதார் சோமசுந்திரம் அவர்கள் 'பனகால் அரசர்' படத்தையும், கே. ஜகதீச செட்டியார் அவர்கள் 'தியாகராயர்' படத்தையும், ஒவ்வொருவரின் சிறப்பியல்புகளை விளக்கக் கூறி திறந்து வைத்தார்கள்.

பின் தலைவரவர்களை ஊர்வலமாக பொதுக் கூட்டம் நடக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர். வழியில் மேடை, மாலைகள் இடப்பெற்றன.

### பொதுக் கூட்டம்

மாலை சந்தைப்பேட்டை மைதானத்தில் பேளுக்குறிச்சி மிட்டாதார் சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. 3000 பேர்கள் கூடினர். தோழர்கள் முத்து, ராமன் முதலான பலர் பாடிய பின், பெரியார் அவர்கள், 'திராவிட நாட்டின் பிரிவினை பற்றியும் இந்து மத ஆதாரங்கள் பற்றியும் மற்றும் பல விஷயங்களையும் விளக்கி சுமார் 3½ மணி நேரம் உணர்ச்சி ததும்ப பேசினார். கூட்டத்தில் கேட்ட கேள்விகளை வரவேற்று தக்க பதில் அளிக்கப்பட்டது. இரவு 10 மணிக்கு வந்தனத்துடன், 'பெரியார் வாழ்க' என்ற பேரொலியுடனும் கூட்டம் இனிது கலைந்தது. பிரபல தனவந்தரும் நூல் வியாபாரியும் ஆன தோழர் சித்தப்ப செட்டியார் அவர்கள் வீட்டில் சிறந்த விருந்து நடைபெற்றது.

### அடுத்த நாள்

அடுத்தநாள் பெரியார் அவர்கள் சித்தர் மலையிலுள்ள தோழர் சித்தப்ப செட்டியார் அவர்களால் கட்டி, பொது நலத்துக்கு விடப்பட்ட சிங்கார பங்களாவில் ஓய்வு பெறுவதற்காக அழைத்து செல்லப்பட்டு அங்கு இரண்டு நாள் தங்கிய பின் சேலம் சென்று தோழர் கெ. ஜெகதீசன் அவர்கள் விருந்தினராய் இருந்து, சேலம் மாநாடு விஷயமாக சேலம் சேர்மன் முதலிய பல பெரியோர்களைக் கண்டு பேசி விட்டு 1-7-44-ஆம் தேதி ஈரோடு வந்து சேர்ந்தார்.

## 'சாமி'க்குப் பூணூல் போச்சு
### அம்மனுக்கு தாலி போச்சு

சிதம்பரம்: சிதம்பரத்திற் கருகாமையிலுள்ள ஸ்ரீ முஷ்ணத்திலிருக்கும் ஸ்ரீ பூவராகசாமி கோவிலில் 'சாமி' போட்டிருந்த தங்கப் பூணூலும், அம்மன் அணிந்திருந்த வைரத் தாலி இரண்டும் மற்றும் சில விலையுயர்ந்த சாமான்களும் (சுமார் 10000 ரூபாய் பெறுமானமுள்ளவை) சென்ற வாரத்தில் களவாடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. காலை பூஜைக்குப் பின்னர் கோவில் கதவு பூட்டப்பட்டதாகவும், மாலையில் பார்க்கும் போது கதவு திறந்து கிடந்ததாகவும் சொல்லப்படுகிறது.

ஓ-நி.

## மறைவு

ஈரோடு: "விடுதலை" "குடி அரசு" காரியத்தில் வேலை பார்த்தவரும் "பாரததேவி" "தமிழ் உலகம்" முதலிய பத்திரிகைகளின் ஏஜண்டுமாயிருந்தவரான தோழர் டி. ஷண்முகம் செட்டியார் சில நாள் நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற 5-7-44-ஆம் தேதி 50வது வயதில் இயற்கையெய்திவிட்டார்.

## சென்னை புகையிலை வரி ரத்து

சென்னை: 1939-ஆம் வருட சென்னைப் புகையிலை வரிச் சட்டத்தை ரத்து செய்யவும் இவ்வகையில் சென்னை பொது விற்பனை வரிச் சட்டத்தில் திருத்தம் செய்யவும் கொண்டுவரப்பட்ட சட்டத்திற்கு கவர்னர் சம்மதியளித்து விட்டார். மத்திய சர்க்கார் ஏப்ரல் 1-ஆந் தேதி முதல் புகையிலை வரி விதிப்பதால், வர்த்தகர்களுக்கு இரட்டை வரியால் கஷ்டம் ஏற்படுவதைத் தவிர்க்கவே, சென்னை மாகாண சர்க்கார் விதித்து வந்த வரி ரத்து செய்யப்படுவதாகத் தெளிவுபடுத்தப்படுகிறது.

## பெண் ஜூரர்கள்

பம்பாய்: பம்பாய் ஹைக்கோர்ட்டின் மூன்றாவது கிரிமினல் செஷன்ஸ்க்கு சென்ற செவ்வாய்க்கிழமை அழைக்கப்பட்டிருந்த ஜூரர்களில் 15 பேர் பெண்களாவார்கள். இந்தியாவில், பெண்களை ஜூரர்களாக நியமித்தது இதுவே முதல் சம்பவம், பெண்களையும் ஜூரர்களாக நியமிக்க அதிகாரம் கிடைக்கும் முறையில் ஹைக்கோர்ட் சட்ட ஷரத்துக்கள் சமீபத்தில் தான் திருத்தியமைக்கப்பட்டன என்றும் அது முதல் இதுவரை 80 பெண்கள் ஜூரர்களாகப் பதிவு செய்து கொள்ளப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிகிறது.

## தபால் மூலம் ஜவுளி அனுப்புதல்
### இந்திய சர்க்கார் தடை

புதுடில்லி: தபால் மூலம், யாரும் பிரிட்டிஷ் இந்தியாவில் எந்த ஒரு இடத்திலிருந்தும், பிரிட்டிஷ் இந்தியாவுக்கு உள்ளாகவோ, வெளியிலோ உள்ள வேறு எந்த இடத்துக்கும் பஞ்சு நூல் அல்லது ஜவுளி அனுப்புவது சட்ட விரோதம் என்று இந்திய சர்க்கார் கோட்டைஸ் பிறப்பித்திருக்கின்றனர் தைக்கப்பட்ட ஆடைகள் அனுப்பலாம்.

## மறைவு

திருச்சி-சிம்மராய சமுத்திரம் கிராமம் தோழர் பொன்னுசாமி அவர்களின் தாயார் 29-6-44-ல் இயற்கை யெய்து விட்டார். அன்று மாலை யாதொரு மூடச்சடங்குமின்றி சவம் அடக்கம் செய்யப்பட்டது. 14-7-44-ல் மாலை டையாருக்கு நீத்தார் கடன் நடைபெறும் என்று தோழர் இராமசாமி தெரிவிக்கிறார்.

## சம்பள உயர்வுக்கு உண்ணாவிரதமா?

சம்பள உயர்வு பெறுவதற்காக உண்ணாவிரதம் (சண்டித்தனம்) ஆரம்பிக்கக் கூடாது என்று ஆரம்ப ஆசிரியர்களுக்கு சில்லா சர்க்கார் கல்வி இலாகா எச்சரிக்கை செய்திருக்கிறது.

## கிணறுகள் வெட்ட ரூ. 15,625

சென்னை: மதுரை, வடஆர்க்காடு, செங்கற்பட்டு, சேலம், திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களில் உணவுப் பொருள் விளைச்சலை அதிகரிக்க கிணறுகள் வெட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட ஒரு திட்டத்திற்கு சென்னை சர்க்கார் சமீபத்தில் சம்மதமளித்திருக்கிறது. மற்றும் கிணறு வெட்டுவதற்கு முன் சோதனைக் குழிகள் போடப்பட்டு அவைகளை உபயோகிக்க முடியாது போனால் அந்தச் சோதனைக் குழிகள் வெட்டுவதற்கான செலவையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ள முன்வருவார்கள். இத்துறையில் மேலும் ஊக்கமளிக்க இந்த வேலைக்காக மேலும் உதவி செய்ய மொத்தம் 15,625 ரூபாய் கொடுக்க இந்திய சர்க்காரும், சென்னை சர்க்காரும் தீர்மானித்திருக்கிறார்கள். ஜில்லாக்களில் வெட்டப்படும் கிணறுகளின் எண்ணிக்கைக்குத் தக்கபடி இந்த உதவிப் பணம் பகிர்ந்து கொடுக்கப்படும்.

இம்மாதிரி உதவியில் பணம் இல்லாமையாலோ, அல்லது உதவிப் பணமும் கடன் தொகையும் இல்லாமையாலோ கிணறுகள் வெட்ட முடியாது தவிக்கும் விவசாயிகளுக்கு ஆங்காங்குள்ள ரெவின்யூ அதிகாரிகள் மூலம் மேலே காட்டியபடி உதவியளிக்கப்படும். இலவசப் பணம், அந்தக் கிணறு வெட்டுவதற்காகும் செலவில் 25 சத விகிதத்திற்கு மேல் இருக்காது. மற்றும் இந்த உதவியின் அதிகப்பட்ட தொகை கிணறு ஒன்றுக்கு ரூ. 310-க்கு அதிகம் போகாது.

இவ்விதம் பணம் பெற்ற 6 மாத காலத்திற்குள் கிணறுகள் வெட்டியாக வேண்டும். கிணறு வெட்டி முடிந்தபின் 3 வருடங்கள் வரை அந்த நிலத்தில் உணவுத் தான்யங்கள் பயிரிடவேண்டும். நிபந்தனைகளை மீறினால் செலவிடப்பட்ட பணத்தை சர்க்கார் கைப்பற்றுவார்கள்.

## இலங்கை அரசியல் திருத்தப்பிரச்னை

இலங்கை அரசியல் சீர்திருத்தம்பற்றி தங்களுடைய சிபார்சு திட்டத்தை அனுப்பும்படி 1943ல் இலங்கை மந்திரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

அதன்படி இலங்கை மந்திரிசபையார் சீர்திருத்தம்பற்றி ஒரு நகல் திட்டம் தயாரித்து சமர்ப்பித்தனர். அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டியை நியமிக்க மன்னர் பிரான் சர்க்கார் தீர்மானித்துள்ளனர். இக்கமிட்டியார் இவ்வருட முடிவிற்குள் இலங்கைக்குச் சென்று சேருவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.


# ஒரு மதராஸி யூனிட்

எழுதுவது:

"இவ்வெகுமதிகளை நாங்கள் பெறும்போது எங்களைப்பற்றி நமது ஜனங்கள் நினைத்துக்கொள்கிறார்கள் என்று தெரிந்துகொள்கிறோம்"

★

மேலும்

அதிக வெகுமதிகள் அனுப்ப

தயவுசெய்து உதவுங்கள்

★

"துருப்புகளின் சௌகரியங்களுக்கு"

என்று குறிப்பிட்டு

## மே. த. கவர்னர் யுத்தநிதிக்கு

பணம் தாராளமாகக் கொடுங்கள்.


## சேலம் அம்மாப்பேட்டை ஜஸ்டிஸ் சங்கம்

1-7-44-ந்தேதி 'குடி அரசி'ல 11-ம் பக்கத்தில் சேலம் அம்மாப்பேட்டை ஜஸ்டிஸ் தமிழர் சங்கத் தலைவர் தோழர் எ. முருகேச முதலியாருக்குப் பதிலாக க. த. ஆறுமுக முதலியார் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பதாக வெளிவந்திருக்கும் செய்தி வெறும் பொய்யென்றும், சிலர் தான்தோன்றித்தனமாக இவ்வாறு புரளி செய்து கொண்டு வருகிறார்கள் என்றும், சங்க அபிமானிகளும், பொது மக்களும் இத்தகைய புரளியைக் கண்டு ஏமாறவேண்டாமென்றும் தோழர் எ. முருகேச முதலியார் தான் சங்கத் தலைவர் என்றும் தோழர் ஆர். குப்புசாமி முதலியார் தெரிவிக்

## சர் ராமசாமி முதலியார்

சென்னை: சர் எ. ராமசாமி முதலியார் அவர்கள் ஜூலை 12-ஆம் தேதி தென்னிந்திய வர்த்தக சம்மேளனத்தாரைக் காண்பார்.

## சர் உஸ்மான்

சென்னை: சர் முகம்மத் உஸ்மான் அவர்கள் டில்லியிலிருந்து ஜூலை 8ஆம் நாள் சென்னைக்கு வருகிறார். 2 வாரங்கள் தங்கியிருந்து விட்டு 23ஆம் நாள் டில்லிக்குப் பயணமாவார்.

## மறைவு

கொழும்பில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக வசித்துவந்தவரும் "தள்ளிப்பட்டு பகுத்தறிவு கழக" ஸ்தாபகருமான தோழர் பி. எஸ். குமாரு அவர்கள் தமது 65 வது வயதில் 22-6-44-ல் இயற்கையெய்தார். அன்னாருக்கு இரு [illegible] மக்கள் உண்டு.

குடி அரசு

1944-ஆம் ஜூலை-மீ 8-உ.

# கஸ்தூரிபாய் பண்டு இரகசியம் வெளியாயிற்று

கஸ்தூரிபாய் பண்டு வசூலைப்பற்றி நாம் சமீபத்தில் எழுதி வந்ததானது இப்போது காந்தியார் வாயினாலேயே உண்மையாக்கப் பட்டு விட்டது. அதாவது காந்தியார் பூனாவில் பேசியபோது பண்டைப்பற்றி குறிப்பிட்டதாவது:-

"பண்டுக்குத் தாம் தலைவராயிருந்தாலும் சர் புருஷோத்தம் தாஸ் தாகூர்தாஸ்தான் தலைவராயிருப்பார்" என்றும், "பண்டுதொகை, பிரசவம், சுகாதாரம், வைத்தியம், கல்வி ஆகிய காரியங்களுக்கு செலவழிக்கப்படும்" என்றும், அதுவும் "கிராமங்களில்தான் செலவழிக்கப்படுமே ஒழிய நகரங்களிலும் பட்டணங்களிலும் செலவழிக்கப்படமாட்டாது" என்றும், "அரசியலுக்கு செலவழிக்கப்படமாட்டாது. ஆனால் எந்தக்காரியத்திற்காகச் செலவழித்த போதிலும் அந்தக் காரியத்தில், ஒரு இந்தியன், அரசியல் முக்கியத்துவமில்லாமல் செலவு செய்ய முடியாது" என்றும் "கஸ்தூரிபாய் ஞாபகமானது நூற்போர் சங்கம் முதலியவை போல் தான் இருக்கும்" என்றும்,

பேசி இருப்பதோடு பண்டுவசூல் சம்பந்தமான விதிகள் சிலவற்றை மாற்றவும் செய்திருக்கிறார். இந்த மாற்றத்திற்குமுன் இருந்த கொள்கையானது காங்கரஸ் கொள்கையைத் தழுவியதாக இருந்ததை பண்டு வசூல் கமிட்டியார் காந்தியார் பேசியதற்கு ஏற்ப மாற்றினதாக தெரியவருகின்றது. இவையாவும் 5-ஆம் தேதி வெளியான தினசரி பத்திரிகைகளில் இருந்தன.

இந்தப் பேச்சுப்படி பார்த்தால் கஸ்தூரிபாய் நினைவு பண்டு அரசியல் முக்கியத்துடன் கதர் சங்கம், நூற்போர் சங்கம், அரிஜன சங்கம் முதலியவைகளைப் போல் கிராமங்களில் வைத்தியம், கல்வி, சுகாதாரம் முதலியவைகளின் பேரால் செலவழிக்கப்படும் என்பதோடு அச்செலவு காங்கரஸ்பற்றுடைய வடநாட்டு முதலாளி ஒருவர் தலைமையில் தான் நடைபெறும் என்பதும் விளங்கிவிட்டது.

செலவழிக்கும் தன்மையும் தலைவர் நிலைமையும் இப்படி இருந்தால் இனி இந்தப் பண்டைக் கொண்டு பிரசாரம் செய்வதற்கு ஆக சேர்க்கப்படும் ஆட்கள் யாராயிருக்க முடியும்? அவர்கள் போக்கினையும் அவர்களது வேலையும் எப்படி இருக்கும்? என்று சிந்திக்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம். கெரிலாக் காங்கரஸ்காரர்கள், கதர் போட்டவர்கள், காங்கரசுக்கு ஆக ஜெயிலுக்குப் போய் விட்டு வந்த தலைவர்களுமாகவே இருப்பார்கள் என்பதோடு ஒவ்வொரு மாகாணத்திலும் காங்கரஸ் தலைவர்களால் சிபார்சு செய்யப்பட்டவர்களாகத் தான் இருப்பார்கள் என்பதோடு நம் மாகாணத்தைப் பொறுத்த வரை பார்ப்பனர்களும், பார்ப்பனர்களால் சிபார்சு செய்யப்பட்ட சிந்தனை இல்லாத அவர்களது அடிமைகளாகவும் தான் இருப்பார்கள் என்பதல்லாமல் வேறு யாரை நியமிப்பார்கள்?

அதுமாத்திரமல்லாமல் இந்த சம்பள ஆள் பிரசாரகர்கள் அத்தனை பேரும், அரசியல் கிளர்ச்சியில் எதற்காவது காந்தியார் சண்டித்தனம் ("சத்தியாக்கிரகம்") செய்வது என்று ஏற்பட்டால், இந்தி பிரசாரசபை, அரிஜன் பண்டு, கதர் இயக்கம், நூற்போர் சங்கம், 'பொது உடமை'க்காரர் ஆகியவற்றில் உள்ள சிப்பந்திகள் ஜெயிலுக்குப் போவது போல் இந்தக் கஸ்தூரிபாய் பண்டு பிரசார சிப்பந்திகள் அத்தனை பேரும் ஜெயிலுக்குப் போவார்கள் என்பதோடு அப்படி ஜெயிலுக்குப் போனவர்கள் அத்தனை பேருக்கும் கஸ்தூரிபாய் நினைவு பண்டிலிருந்து தான் அவர்கள் வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் சம்பளம் நடந்து கொண்டு இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியுமா? பட்டணங்களில் நகரங்களில் உள்ள ஜனங்களுக்கு காங்கரஸ் யோக்கியதை ஒரு அளவுக்குத் தெரிந்துவிட்டதால் கிராமப் பாமர ஜனங்களை ஏய்க்க இது ஒரு வழி என்றே சொல்ல வேண்டும். இதைப் பற்றி சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் வெளி நாட்டுப் பாதிரிமார்கள், பொதுநலப் பிரசார பொதுநலத் தொண்டு [illegible] செய்வதின்மூலம், தாங்கள் மத நலத்தைப் பெருக்கிக்கொள்வது போல் காங்கரஸ்காரர்கள் பல வழிகளில் பொது மக்களிடம், பொது நலத்துக்கு என்று பணம் வசூலித்து தங்கள் இயக்க நலத்தை, அதாவது பார்ப்பன ஆதிக்கத்தைத் தேடிக்கொள்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

இதற்கு நம் நாட்டுச் செல்வவான்கள் உதவுவதில் அதிசயமில்லை. ஏனெனில் காந்தியார் கைவசத்தில் சர்க்கார் இருப்பது மாத்திரமல்லாமல் பொதுவுடமைக்காரர் என்பவர்களும் அதிவிசுவாசமுள்ள காப்பாளிகள் போல் காந்தியார் காலடியில் இருக்கிறார்கள். மும்முறை நான் முறை சிறை சென்ற—பிழைப்புக்கு வேறு வழியற்ற வாலிபர்கள் பலர் அவரின் கால் தூசிக்கு அடியில் காத்திருக்கிறார்கள். பதவி பட்டம் எதிர்பார்க்கும் சமயசஞ்சீவிகளில் கைதேர்ந்தவர்கள் அவரை சரணடைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் செல்வவான்களை வையவும் அவசியப்பட்டால் பலாத்காரத்தை உபயோகப்படுத்தவும் காந்தியார் கடுகளவு ஜாடைகாட்டினால் போதுமானதாயிருக்கும், அல்லது தொழிலாளர்களுக்கு சிறிது சாவி கொடுத்துவிட்டாலும் போதும். ஆதலால் இவர்களுக்கெல்லாம் பயந்து காந்தியாருக்கு கப்பம் கட்டிவரவேண்டியது செல்வவான்களுக்கு இன்றியமையாத கடமையாக ஆகிவிட்டது. நம் நாட்டில் உள்ள சில செல்வவான்கள் காந்தியாருக்கும் அவர் வசமிருக்கும் மேற்கண்ட ஆள்களுக்கும் பயப்படாவிட்டாலும் வடநாட்டு முதலாளிகளின் சம்மந்தமோ [illegible], வரவு செலவோ, புன்சிரிப்போ வைத்துக்கொண்டிருப்பவர்கள் தங்கள் சுயநலத்திற்கும், மானத்திற்கும் பயந்து கேட்ட பணத்தைக்

கொடுக்க வேண்டியவர்களாகிறார்கள்.

அன்றியும், காந்தியார் பணக்காரர்களுக்கு தன்னை விரோதியென்று சொல்லிக் கொள்ளுகிற மாதிரியிலேயே பணங்கொடுக்கா விட்டால், பணக்காரர்களுக்கு நான் விரோதி ஆகிவிடுவேன் என்கின்ற கருத்து தொனிக்கிறபடியாலும் பணக்காரர்கள் கேட்டவுடன் கொடுக்க வேண்டியவர்களாகிறார்கள்.

கடைசியாக பணங்கொடுக்கவும் வசூலித்துக்கொடுக்கவும் மாத்திரம் தான் காங்கரசல்லாத கட்சியாரின் தயவு கோரப்படுமே ஒழிய, அதை செலவு செய்வதில் கட்சி அல்லாதவர் என்கின்ற பெயரால் காங்கரஸ் அனுதாபிகளையும், பிரசாரர் சிப்பந்திகள் என்பவர்களாக முழு காங்கரஸ் கூலிகளைத் தாமாகப் பார்த்துத்தான் சேர்ப்பார்கள். இதுவும் அவர் பேச்சில் காணக்கிடக்கின்றது.

ஆகவே இந்தக் கஸ்தூரிபாய் ஞாபகார்த்தப்பண்டின் தொல்லையை சமாளிக்க திராவிடமானவர்கள்—இளைஞர்கள்—மானமுள்ள தொண்டர்கள் தயாராக இருக்க வேண்டியது திராவிடத்தின் மானத்தைக்காக்க மிக மிக அவசியமாகும்.

## ஜப்பான் நம்பிக்கை

ஜப்பானியர் போரிலிறங்கி வருடங்கள் மூன்றரைக்குமேல் ஆகிவிட்டது. ஆரம்பத்தில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை பலப்பட்டே வந்திருக்கும். காரணம் அவர்கள் அச்சமயத்தில் அடைந்த வெற்றிகளேயாகும். அந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் அவர்கள் இந்தியாவின் மீதும் படையெடுத்தார்கள். ஆனால் கடந்த நான்கு, ஐந்து மாதங்களாக நடந்துவரும் போரின் முடிவுகளிலிருந்து அந்நம்பிக்கை பாழாயிருக்கும் என்றே நம்புகின்றோம். அஸாம் முனையில் மட்டுமல்ல, பசிபிக் கடற்போரிலும், வட பர்மாவிலும் அவர்களுக்குத் தோல்வியே கிடைத்து வருகிறது. ஆதலால் அவர்கள் நம்பிக்கை, இவைகளினால் ஓரளவுக்கு குலைக்கப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

1941ல் இருந்த நிலைமைக்கும் 1944ல் இருக்கும் நிலைமைக்கும் நேசதேசங்களின் பலத்தில் எவ்வளவு வித்தியாசம் இருந்து வருகிறதென்பதையும் இப்போர் முடிவுகள் அவர்களுக்கு நன்கு விளக்கியிருக்கும்.

நாட்டாசையின் மீதே அவர்கள் பர்மா மீதும் இதர நாடுகள் மீதும் படையெடுத்தார்கள் என்றாலும் சீனாவுக்குப் போகும் சப்ளையைத் தடுக்கவேண்டும் என்பது தான் முக்கியமான நோக்கமாகும். இதே நோக்கத்தின் மீதே மணிபூர் மீதும் படையெடுத்தார்கள். ஏனெனில் வடபர்மாவில் ஜெனரல் ஸ்டில்வெல்லின் படைகள் ஜப்பானியரைத் தாக்கிக் கொண்டே வருகின்றன. அவைகளுக்கு சப்ளை வந்துகொண்டிருந்தால் தானே போராட முடியும். சப்ளை வராமல் தடுத்துவிட்டால் ஜெனரல் ஸ்டில்வெல்லின் படைகள் சரணடைந்துவிடும் என்றும், சீனாவுக்குப் போகும் சப்ளையையும் தடுத்துவிடலாம் என்றும் ஜப்பானியர் கருதியிருந்தனர். ஆனால் அந்த எண்ணத்தில் நேசப் படையினர் மண்ணைப்போட்டு விட்டனர். ஜெனரல் ஸ்டில்வெல்லினுடைய கூட்டுப் படைகளுக்கு விமான மூலமாக வேண்டிய சப்ளைகள் நேச நாட்டினரால் அனுப்பப்பட்டு வந்ததும் எதிரிப் படையின் பின்னணியில் எதிரியின் போக்குவரத்துக்களைப் பாழ்படுத்திக் குழப்பம் உண்டாக்கும் வேலையில் ஜெனரல்வெண்டாபின் தலைமையில் சின்டிட் படைகள் செய்து வந்த வேலையும் அவர்கள் எண்ணத்தைப் பாழாக்கிவிட்டன.

கோஹிமா முற்றுகை தகர்க்கப்பட்டு விட்டது. மணிப்பூர் முற்றுகை முறியடிக்கப்பட்டு அப்பகுதியிலிருந்த ஜப்பானியப் படைகளுக்கு ஏராளமான நஷ்டம் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. மோகாங் என்ற இடம் நேசநாட்டினரிடம் பிடிபட்டது. இம்பால்-கோஹிமா ரோட்டை 56 மைல் தொலைவுக்குக் கைப்பற்றி விட்டனர்.

இறுதியாக, இந்திய மண்ணில் கால் ஊன்றலாம் என்ற ஜப்பானி[illegible]

## பெரியார் சுற்றுப் பிரயாணம்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ஜூலை மாதத்தில் அடியிற்கண்டபடி சுற்றுப் பிரயாணம் செய்வார்.

ஜூலை 6-ஆம் தேதி இரவு ஈரோடு விட்டு புறப்பட்டு விருதுநகர் மார்க்கம் 8, 9-ஆம் தேதி தூத்துக்குடி மாநாட்டுத் திறப்பு விழாவாற்றுவார்.

10-ஆம் தேதி திண்டுக்கல் அடுத்த கல்வார்பட்டியில் நடக்கும் திண்டுக்கல் தோழர் மந்திரன் அவர்கள் மகன் திருமணத்திற்குத் தலைமை வகிப்பார்.

11-ஆம் தேதி பிரயாணம்.

12-ஆம் தேதி மாயவரம் அடுத்த பேரளத்தில் நடக்கும் தோழர் மகாதேவ முதலியார் செல்வியின் திருமணத்திற்குத் தலைமை வகிக்க செல்வார்.

13-ஆம் தேதி பிரயாணம்.

14-ஆம் தேதி ஈரோடு.

15-ஆம் தேதி சேலம்.

16-ஆம் தேதி திருச்சி சுயமரியாதை மாநாட்டுத் திறப்பு விழாவாற்றச் செல்வார்.

17-ஆம் தேதி மணச்சநல்லூர் பொதுக் கூட்டம். 18-ஆம் தேதி பிரயாணம். 19, 20, 21-ஆம் தேதிகளில் சேலம் தாதம்பட்டி, ஈரோடு.

22-ஆம் தேதி ஜலகண்டபுரம் மாநாடு.

23 முதல் 28 வரை சேலம் தாதம்பட்டி. 29-ஆம் தேதி ஈரோடு.

30-ம் தேதி சென்னை சுயமரியாதை மாநாடு. 31-ஆம் தேதி சென்னை 'சந்திரோதய' நாடகத்திற்குத் தலைமை வகிப்பார்.

ஆகஸ்டு 1-ஆம் தேதி ஈரோட்டிற்குப் பிரயாணம்.

### மணச்சநல்லூர்

17-7-44-ல் மணச்சநல்லூரில் தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ரா. முதலியோர்கள் பேசுவார்கள்.

## முக்கிய குறிப்பு

ஜஸ்டிஸ் கட்சி யென்னும் தென் இந்திய நல உரிமைச் சங்க மாகாண மாநாடு ஆகஸ்ட் மாத பிற்பகுதியில் நடைபெற ஏற்பாடுகள் துரிதமாக செய்யப்பட்டு வருகின்றன. விபரம் பின்னால் வரும்.

ரோடு பிரிட்டிஷ் கையில் வந்து விட்டதால், பிரிட்டிஷ் இந்தியப் படைகள் மத்திய பர்மாவில் மேற்கொண்டு முன்னேறிக் கொண்டு போகும் என்பதுடன், வடபர்மாவில் ஜப்பானிய நிலையங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றப் [illegible] நாம் உறுதி

## காகிதக் கொடுமை

### அடுத்த இதழ்

நாம் ஏற்கனவே தெரிவித்தபடி, நாம் சர்க்காரின் யுத்த முயற்சியை ஆதரித்தும், சர்க்காருக்கு எவ்வித தொந்திரவும் கொடுக்காமல் இருந்தும், "குடி அரசு" 25 வருடமாய் நடக்கும் பத்திரிகையாயிருந்தும், நமக்கு வரவர காகிதக் கஷ்டம் சர்க்காரால் அதிகரித்து விட்டதால், சர்க்கார் கிரமமான சப்ளை செய்யும் வரை, நமது 'குடி அரசு' இனி 8 பக்கங்களுடன் தான் வெளி வரும் என்பதை துக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆதலால் இனிமேல் நீண்ட கட்டுரைகள், நம் இயக்க சம்பந்தமற்ற செய்திகள் வெளியிடப்படமாட்டாது என்பதோடு முக்கியமான செய்திகளும் பெரிதும் மிக மிக சுருக்கமாகத்தான் வெளியிடப்படும். நீண்ட செய்திகளையோ கட்டுரைகளையோ வெளியிடமுடியாமைக்கு நேயர்கள் மன்னிக்கவேண்டும். மாகாநாட்டு நடவடிக்கைகளும் அது சம்பந்தமான செய்திகளும் கூட இனி சுருக்கமாகவே வெளியிடப்படும்.

## ராவ்சாகிப் பாலசுப்ரமணியம்

### லாரியில் மோதுண்டார்

சென்னை: சென்னை சிறைச்சாலை சூப்பரிண்டெண்டு ராவ்சாகிப் எம். பாலசுப்ரமணியம் (இந்திராணிபாலசுப்ரமணியம் அம்மையாரின் கணவர்) அவர்கள் 3-7-44-ஆம் தேதி காலை தம் ஆபீசுக்கு ரிக்ஷாவில் பாடி கார்டு ரோடு வழியே சென்று கொண்டிருந்த போது இராணுவ லாரியால் மோதப்பட்டு கீழே எறியப்பட்டார். அவரது வலது கை எலும்பு முறிந்திருக்கிறது. இடுப்பிலும் காலிலும் காயமேற்பட்டிருக்கிறது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## திருவாரூர் பொதுக் கூட்டம்

நாளது 15-7-44-ல சனிக்கிழமை மாலை மணி 6-30-க்கு விஜயபுரம் எல்லையம்மன் சன்னதித் தெருவில் "யுத்தமும் நமது கடமையும்" என்பது பற்றியும் "திருவாரூர் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியும் டாக்டரின் நிர்வாகமும்" என்பது குறித்தும் தோழர்கள் பாவலர் எம். எஸ். பாலசுந்தரம், எஸ். கே. சாமி, வி. ஜி. ரெங்கராஜு, மு. கருணாநிதி, பி. வி. ஓ. ராஜகோபால், வி. எஸ். பி. யாக்கூப், டி. எம். ராசப்பா முதலியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். பொது மக்கள் திரண்டு வரும[்படி] கோரப்படுகிறார்கள்.

## இந்தியாவில் தயாராகும் ஒட்டுப் பிசின்கள்

டேராடூன் காட்டாராய்ச்சி ஸ்தாபனத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளிலிருந்து இந்தியாவில் கிடைக்கும் தார் திரவங்களைக் கொண்டு ஒட்டுப் பிசின்கள் தயாரிக்கலாமென்று தெரிகிறது. வெளிநாடுகளிலிருந்து வரும் ஒட்டுப் பிசின்கள் கிடைப்பது கஷ்டமாயிருப்பதால் காட்டாராய்ச்சி ஸ்தாபனத்தைச் சேர்ந்த மரப்பாதுகாப்புப்பிரிவில் இந்தியாவில் கிடைக்கும் ஒட்டுப் பிசின்களைப்பற்றி நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் முடிவுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இது சம்பந்தமான பிரசுரத்தில் பற்பல ஒட்டுப் பிசின்களையும் தயாரிக்கும் விதமும் அவற்றை உபயோகிக்கும் விதமும் அவற்றின் செலவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் கிடைக்கும் எழுபதுக்கு மேற்பட்ட மாவுகளைக் கொண்டு உரத்தையும் ஒட்டும் தன்மையையும் கண்டறிவதற்காக நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## வரவேற்பு

திருச்சி: 3-7-44-ல் உறையூர் சவுக்கு தேவாங்கத் தெருவில் தோழர் தம்புராஜு அவர்கள் சீர்திருத்தத் திருமணம் செய்ததற்கு தோழர் பொ. வெ. மு. இலட்சுமணய்யா அவர்கள் தலைமையின் கீழ் மண மக்களை தன்மதிப்பு இயக்கத் தோழர்கள் வரவேற்றார்கள். மாலை 6 மணிக்கு சிற்றுண்டி அளிக்கப்பட்டபின் வரவேற்புத் தாள் வாசித்து அளிக்கப்பட்டது. பின் பல தோழர்கள் பேசினார்கள்.

## செல்வம் நினைவு விளையாட்டுக் கழகம்

சென்னை: வண்ணையம்பதி, எண் 91, மணியகார் சத்திரத்தில் இருக்கும் ஷை கழகத்தில், 10-7-44 திங்கட்கிழமை மாலை 8 மணிக்கு தோழர் ஆர். எம். கருணாசலம் தலைமையில் ஓர் நிர்வாகக் கூட்டம் நடைபெறும்.

* *

சென்னையில் கலப்பு மணம் செய்து கொண்ட டாக்டர் கே. என். செங்கோட்டையாவின் துணைவியார் 23-6-44-ல் ஆண் மகவைப் பெற்றதைக் குறித்து 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடை அளித்துள்ளார்கள்.

## நாகை சுயமரியாதைச் சங்கக் கூட்டம்

8-7-44ல் திராவிடர் கழக கட்டிடத்தில் மாலை 7 மணிக்கு தோழர் டி. கே. விஜயராகவலு பி. ஏ., பி. எல்., தலைமையில் கூடும். அதுசமயம் அங்கத்தினர்களும் அபிமானிகளும் தவறாது வர [illegible]

## திருவாரூரில் "சந்திரோதயம்"

18-8-44-ல் திருவாரூர் கருணாநிதி தியேட்டரில் ஷை நாடகம் காஞ்சி திராவிட நடிகர் கழக சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் கோஷ்டியாரால் 'திராவிட நாடு' பத்திரிகை வளர்ச்சிக்காக நடத்தப்படும். தஞ்சை ஜில்லா தோழர்கள் ஆதரவுதர வேணுமாய் கோரப்படுகிறார்கள் என காரியதரிசி தோழர் பி. வி. ஓ. ராஜகோபால் எழுதுகிறார்.

## வேண்டுகோள்

சேலம்: அண்மையில் மதுரையில் நடக்கப்போகும் 'சென்னை மாகாண மருத்துவ வாலிப மாநாட்டிற்கு', சென்னை மாகாணத்திலுள்ள மருத்துவ சங்கங்கள் தக்க பொருளுதவி புரிந்து, மாநாட்டை வெற்றிகரமாகவும், சிறப்புடனும் நடத்திக்கொடுக்க வேண்டுகிறேன் என சேலம் எஸ். பி. சின்னத்தம்பி பண்டிதர் எழுதுகிறார்.

## சென்னை கார்ப்பரேஷன் கமிஷனர்

சென்னை: சென்னை கார்ப்பரேஷன் சபையின் புது கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் தோழர் ஜே. பி. எல். ஷெனாய் ஐ. சி. எஸ். 3-7-44-ஆம் தேதி தோழர் ஓ. புல்லாரெட்டியிடமிருந்து பதவியை ஏற்றுக் கொண்டார்.

## ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள்

துருக்கியில் மார்டின் என்ற நகரில் ஒரு பெண்ணுக்கு சென்ற திங்களன்று ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள் பிறந்தன. அவை யாவும் ஆண்குழந்தைகள். அக்குழந்தைகள் சுகமாக இருக்கின்றன.

## தமிழ்ப் பெயர் அளிப்பு விழா

குடியேற்றம் தோழர் அண்ணல்தங்கோ அவர்களின் முதல் ஆண்மகவுக்கு தனித்தமிழ்ப்பெயரளிப்புவிழா, வேலூர், கூடலூர் செங்கல்வராய முதலி தெரு 6 7/1ம் எண் இல்லத்தில் 29-6-44 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு புலவர் தெய்வநேயப்பாவலர் தலைமையில் தொடங்கிற்று. இவ்வூர் தோழர் எம். ராதாபாய் அம்மையார் அவர்களால் இரவு 7 மணி வரை தனித்தமிழ் இசையளிப்பு நடந்தது. பண்டிதை நாராயணி அம்மையார் சொற்பொழிவாற்றினார்.

---

திருவண்ணாமலை தாலுகாவில் தோழர் ஆர். என். நடேச முதலியார் சுற்றுப் பிரயாணம் செய்து தற்சமயம் நேசநாட்டினருக்கு கிடைத்து வரும் [illegible]ான வெற்றிகளைப் பற்றி கிராமங்[illegible]து வருகிறார்.

## திருமணங்கள்

நாளை 12-7-44 தேதி புதன் காலை 10 மணிக்கு பேரளம் தோழர் என். மகாதேவன் அவர்கள் புதல்வி தோழர் செல்வசுந்திரத்துக்கும் கீவளூர் தோழர் சி. சம்மந்தத்திற்கும் இல்லறவாழ்க்கை ஒப்பந்தம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் பேரளத்தில் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களின் வருகையும் எதிர்பார்க்கப்படுகிறது.

* *

12-7-44 புதன்கிழமை காலை 7½ மணிக்கு தஞ்சை மகர்நோம்புச் சாவடி பில்லுக்காரத் தெரு, 885 நம்பர் இல்லத்தில் தஞ்சை தோழர் டி. வி. சுந்தரராசு அவர்களுக்கும், வெனக்காடு கிராமம் தோழர் அம்பலம்மையாருக்கும் தஞ்சை தோழர் பி. வேணுகோபால் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெறும்.

* * *

திருச்சி பாலக்கரை துரைசாமி செட்டியார் சத்திரத்தில் காலம் சென்ற அளகிரிசாமி செட்டியார் குமாரன் தோழர் சின்னகிருஷ்ணனுக்கு திருச்சி பீமநகர் லேட் ரெங்கசாமி நாயுடு பௌத்திரியும் சுந்தரராஜலு நாயுடு குமாரத்தியுமான தோழர் பக்கிரி அம்மாள் என்கின்ற லெஷ்மி அம்மாளை 12-7-44-ஆம் தேதியில் வாழ்க்கைத் துணைவியாக்க நிச்சயித்திருக்கிறது என ஏ. கோவிந்தசாமி செட்டியார் எழுதுகிறார்.

* * *

ஈரோடு: கான்சாகிப் கே. ஏ. ஷேக் தாவுது சாகிபு எம். எல். ஏ. அவர்களின் புதல்வி தோழர் பாத்திமுத்துஜொஹரா பீபீக்கும் தோழர் முஹம்மது குதாதுல்லா சாகிபுவின் சகோதரர் தோழர் கே. கே. அப்துல் சமத் சாகிபு பி. எஸ்சி.,க்கும் ஈரோடு மணமகள் இல்லத்தில் 10-7-44 ஆம் தேதி திருமணம் நடைபெறும்.

* * *

நாகை: 30-6-44 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு தோழர் என். பி. கிருஷ்ணன் தலைமையில் தோழர் கு. முனியாண்டி வைத்தியர் மகன் முத்துவுக்கும் ராமசாமி வைத்தியர் மகள் பாக்கியத்தம்மாளுக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தது. தோழர்கள் டி. பி. ஆறுமுகம், ஆர். வி. கோபாலன், டி. என். ராமசந்திரன், ஏ. கோவிந்தன் சீர்திருத்தத்திருமணம் என்பதுபற்றி பேசினார்கள். இயக்க சங்கங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

துறையூர்: 30-6-44-ல் உடையூர் தில்லைய செட்டியாரின் மகன் தம்பு ராஜூக்கும், துறையூர் சுப்பராயலு செட்டியாரின் மகள் புஷ்பத்திற்கும் மணமகள் இல்லத்தில் துறையூர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் தோழர் சுப்பு ரெட்டியார் அவர்கள் தலைமையில் சீர்திருத்த முறையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

* *

திருவண்ணாமலை: தோழர் எம். பி. ரங்கசாமி ரெட்டியார் அவர்களின் மகள் தோழர் சரோஜினி அம்மாளுக்கும், கட்டவாரபல்லி தோழர் கே. ஆர். ராஜா ரெட்டியார் மகன் தோழர் ஆள்வார் ரெட்டியாருக்கும் 4-6-44-ல் மணமகன் இல்லத்தில் திருமணம் இனிது நடைபெற்றது. இயக்கப் பத்திரிகைகளான திராவிடநாடு முதலிய பத்திரிகைகளுக்கு ரூபாய் ஐந்து வீதம் நன்கொடை அளிக்கப்பட்டது.

* * *

30-6-44 வெள்ளிக்கிழமையன்று செம்பியமாதேவியில் திருவாரூர் தோழர் டி. என். லெட்சப்பா அவர்களுக்கும், தோழர் கனகாம்புஜம் அவர்களுக்கும் இசை உலகு ஜோதி திருவாடுதுறை நாதசுர வித்வான் தோழர் இராஜரெத்தினம் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அது போழ்து திருவாரூர் சுயமரியாதைச் சங்கத்தார் தெ. இ. ந. உ. சங்கத்தார், பன்னீர்செல்வம் வாசகசாலையார், டி. என். இராஜாங்கம், மன்னார்குடி மாணிக்கம், எஸ். கணேசன் ஆகியோர் வாழ்த்திதழ்கள் அளித்தனர். தோழர்களான எஸ். பி. கிருட்டினசாமி, இராமாமிர்தத் தம்மாள், டி. எம். ராஜப்பா, ஜெ. கருணாநிதி ஆகியோர் பேசினர். சமபந்தி விருந்தோடு நடைபெற்றது.

## நெல்லை மாவட்ட தாழ்த்தப்பட்டோர் 17வது மாநாடு

கோவில்பட்டி: 2-7-44 தேதி ஆதிதிராவிட சங்க கட்டடத்தில் தோழர் மாரலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஷை மாநாடு நடத்துவதுபற்றி யோசித்து கமிட்டி நியமிக்கப்பட்டது.

குறிப்பு: தோழர்கள் எஸ். எம். செல்லையா, எஸ். தங்கையா ஆகியவர்கள் 10 ஆம் தேதிமுதல் தூத்துக்குடி மார்க்கமாக பிரசாரத்திற்கு வருகிறார்கள். அபிமானிகளும், ஆதிதிராவிட அன்பர்களும் பொருளுதவி புரியவும் பம்பாய், சிலோன் வாழ் ஆதிதிராவிடர்கள் நிதிதிரட்டி அனுப்பி மாநாட்டை நடத்தித்தர உதவி செய்யக்கோருகிறோம்.

## உத்தமியார் காலமானார்

ஈரோடு பிரபல செல்வவர்த்தர் உப்புமண்டி ஜனாப் கே. காதர் சாயபு அவர்களின் மனைவியார் உத்தமி சையத் பீபீ அம்மையார் அவர்கள் 27-6-44-ஆம் தேதியில் சுமார் 9-30 மணிக்கு முடிவெய்தினார்.

## புதிய முகவரி

தில்லை க. அன்பழகனுக்கு இனி எழுதுவோர் அவர் சென்னை பச்சையப்பா கல்லூரி தமிழாசிரியராயமர்ந்திருப்பதால்,

க. இராமையா வென்கின்ற க. அன்பழகன் பி. ஏ, (ஆனர்ஸ்) தமிழாசிரியர், பச்சையப்பா கல்லூரி, சேத்துப்பட்டு, சென்னை.

என்றெழுதினால் நலம்.

## கொரண்டி யாதவர் வாலிபர் சங்கம்

கொரண்டி 1-7-44-ல் யாதவர் சங்கத்தின் ஆசிரியர் ஆண்டியப்பா அவர்கள் தலைமையில் கண்ணன்புதூர் ஈ. வெ. ரா. கழகக் காரியதரிசி தோழர் சு. வன்னியப்பெருமாள் அவர்கள் கைம்மையின் கதி என்னும் விடயம் பற்றி சொற்பெருக்காற்றினார்கள். அதனை ஒட்டி தோழர்கள் நீல. நாராயணன், ஆ. தெ. நாயகம், கிருட்டினமூர்த்தி இன்னும் பல தோழர்கள் பேசினார்கள்.

---

தஞ்சை: 3-7-44-ஆம் தேதி கல்விக் கூடத்தின் சிறப்புக் கூட்டம் தஞ்சைக் கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவர் தோழர் பி. ஆர். மீனாட்சிசுந்தரம் பிள்ளை எம். ஏ., அவர்களின் தலைமையில் குழுமியது. வித்துவான் தோழர் கோ. சி. பெரியசாமிப் புலவர், தோழர் கோ. இரத்தினசாமி முதலியவர்கள் பேசிய பின் கூட்டம் 10 மணிக்கு நிறைவேறியது.

* * *

குணமங்கலம்: 25-6-44-ல் பிற்பகல் குணமங்கலம் ஆதிதிராவிட தமிழ் இளைஞர்களால் ஏற்படுத்தியிருக்கும் திராவிட இளைஞர் கழகத்தின் முதலாம் ஆண்டு விழா தோழர் டி. பி. வேதாசலம் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் பேசினார்கள்.

அவ்விழாவிற்கு வரவு (சந்தா-நன்கொடை உட்பட) ரூ 57-1-0, செலவு ரூ. 51-10-11, மீதி ரூ. 5-7-1, மீதி சாமான்கள் விற்றதில் வரவு ரூ. 4-3-10; ஆக இருப்பு ரூ. 9-10-11. 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* * *

தூத்துக்குடி: 2-7-44-ல் தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்கத்தின் சார்பில் கணேசபுரத்தில் தோழர் எஸ். சுடலை அவர்கள் தலைமையில் தோழர் பு. நவமணி வாத்தியாரால் 'அம்பேத்கார் தேகப்பயிற்சிக் கழகம்' திறந்துவைக்கப்பட்டது.

மற்றும் அன்றிரவு தோழர் எம். ஏ. தாக்காஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல தோழர்கள் பேசினார்கள்.

## எல்லோருக்கும் சரியான போஷணை

விவசாயம், காடு, மீன்பிடிப்பு இவை சம்பந்தமான யுத்தத்துக்குப் பிந்திய கொள்கைக் கமிட்டி ஜூன் 26-ந் சிம்லாவில் கூடிய போது, கவர்னர் ஜெனரல் நிர்வாக சபையின் கல்வி நிலை சுகாதார மெம்பரான கனம் ஸர் ஜோகேந்திர சிங் பேசியதன் சாரம்:-

இந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் சரியான போஷணை அளிப்பதே நமது முதன்மையான நோக்கம். நமது ஜனத்தொகையில் நூற்றுக்கு முப்பது பேருக்குத் தான் சரியான போஷணை கிடைப்பதாக ஸர் ஜான் மெகா கூறுகிறார். தற்போதைய உற்பத்தி அளவை வைத்துக் கொண்டு பரம ஏழையும் வேண்டிய உணவைப் பெறக்கூடிய வகையில் உற்பத்தியை எப்படிப் பெருக்குவது, பெருக்கிய உணவை எப்படிப் பங்கிடுவது என்பதை இந்தக்கமிட்டி கண்டறிந்து சொல்லவேண்டும்.

பயிராகாத நிலங்களில் பயிர் செய்தும் பயிராகும் நிலங்களில் பயிர்த்தொழிலை தீவிரப்படுத்தியும் உற்பத்தியைப் பெருக்கலாம். நல்ல உணவு, நல்ல விதை, நல்ல பாசனம், நல்ல எரு, நல்ல வடிகால்வசதி, நல்ல கருவிகள், நல்ல கவனிப்பு, இவைகளால் விவசாயத்தைத் தீவிரப்படுத்தலாம். ஏற்கனவே பயிரிடப்படும் நிலன்களிலிருந்தும் தரிசாய்க் கிடக்கும் நிலங்களில் பயிர்களோ மரங்களோ, புல்லோ விளைவித்தும், நில அரிப்பைத் தடுத்தும் நீர்ப்பாசனத்தை விஸ்தரித்தும் உள்நாட்டில் கிடைக்கும் குப்பை, கூளம், தழைகள், பசுந்தாள், பிண்ணாக்கு, எலும்பு முதலிய எருக்களைச் சேகரம் செய்தும் உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமாய் மாகாணங்களில் கணக்கெடுப்பதற்கு இந்தக் கமிட்டி வழி சொல்லலாம். முக்கியமாக நல்ல விதைகளை உற்பத்திசெய்து பெருக்குவதை நாம் உடனே கவனிக்கவேண்டும். வளங் குன்றிக் கிடக்கும் நமது நிலங்களுக்குச் சரியாய் எருவிட்டால் விளைச்சல் எவ்வளவோ அதிகமாகும். நல்ல விதையும் போதிய எருவும் தகுந்த நீர்ப்பாசனமும் தற்போது பயிராகும் நிலங்களுக்கெல்லாம் கிடைத்தால் விளைச்சல் ஒன்றுக்கு ஒன்றரையாகும் என்று நிச்சயமாய்க் கூறலாம்.

## இந்தியாவில் மோட்டார் உற்பத்தி

பிர்லா சகோதரர்கள் ஆரம்பித்திருக்கும் ஆட்டோமோபைல் கம்பெனி ரூ. 20 கோடி அங்கீகாரம் பெற்ற மூலதனத்துடன் இன்னும் சில நாட்களில் ஆரம்பமாகிவிடும் என்று தெரிகிறது. இதில் 5 கோடி ரூபாய் செலுத்தப்பட்ட மூலதனமாகும். பிர்லா சகோதரர்களைத் தவிர வேறு பிரபல செல்வந்தர்களும் டைரக்டர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர். கார், டிராக்டர் உற்பத்தி முதலியவற்றையும் கம்பெனி யுத்தத்திற்கு பிறகு மேற்கொள்ளும் என்று தெரிகிறது.

## தமிழ் மாகாண சித்த வைத்திய மாநாடு

ஈரோடு மகாஜன உயர்நிலைப்பள்ளி சரஸ்வதி மண்டபத்தில் ஜூலை மாதம் 29, 30, சனி, ஞாயிறு இரு தினங்களில் நடைபெறும். வைத்தியத் தோழர்கள் அனைவரும் வருக. மகாநாட்டுத் தலைவர் தோழர் G.A சின்னு நாயுடு F. C. E., R. I. M. P.

ஈ. வே. கிருஷ்ணசாமி,
வரவேற்புக்கழகத்தலைவர்.

## இன்னும் நாலு லக்ஷம் டன் கோதுமை

இந்திய உணவு நிலைமையை ஆழ்ந்து கவனித்து வரும் பிரிட்டிஷ் சர்க்கார், 1944 வருஷம் செப்டம்பர் முடிவுக்குள் இந்தியத் துறைமுகங்களுக்கு நாலு லட்சம் டன் கோதுமை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுமென்று இந்திய சர்க்காருக்கு அறிவித்திருக்கிறார்கள். 1943-ஆம் அக்டோபர் மாத முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நாலு லட்சம் டன் உணவுத் தானிய இறக்குமதி அல்லாமல் மேற்கொண்டே இந்த ஏற்பாடுசெய்யப்படும். அந்த இறக்குமதி இன்னும் நடந்துவருகிறது. ஏற்கனவே அநேகமாய் அது பூர்த்தியாகிவிட்டதாகத் தெரிகிறது. ஆகவே 1943 அக்டோபர் முதல் 1944 செப்டம்பர் வரையிலுள்ள 12 மாத காலத்தில் மொத்தம் 8 லட்சம் டன் உணவு தானியம் இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டுவிடும். பிரிட்டிஷ் சர்க்கார் 1944 ஆகஸ்ட் ஆரம்பத்திலும் 1944 நவம்பர் ஆரம்பத்திலும் நிலைமை எப்படியிருக்கிறதென்று கவனிப்பார்கள்.

## ரயில்வேயில் "லஞ்சம்" ஒழிப்பு

புது டில்லி: சர்க்கார் ரயில்வேக்களில் தலைகாட்டி நிற்கும் லஞ்சம் வாங்கும் பழக்கத்தையும் மற்ற வகை ஊழல்களையும் ஒழிக்க சர்க்கார் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். மே, ஜூன் மாதங்களில் இந்தக் குற்றங்களுக்காக 5 பேர் தண்டிக்கப்பட்டனர்.

## சுகாதார அதிகாரிகள் மாற்றம்

கோவை: கோவை ஜில்லா சுகாதார அதிகாரி ராவ்பஹதூர் டாக்டர் ஒய். பி. வாசுதேவ அய்யர் திருச்சினாப்பள்ளிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

## யுத்த சிப்பாய்களுக்கு உதவி

### போப்பால் சர்க்கார் தாராளம்

யுத்தத்திலிருந்து தாய்நாடு திரும்பி வரும் போப்பால் சமஸ்தான சிப்பாய்களுக்கு வாழ்க்கை வசதிகள் செய்வதற்காக சுமார் 75,000 ஏக்கரா நிலத்தை ஒதுக்கிவைக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை போப்பால் சமஸ்தானம் தயார் செய்திருக்கிறது.

## 100 சர்க்கார் குமாஸ்தாக்கள் ராஜிநாமா

பம்பாய்: இந்திய சர்க்கார் சப்ளை இலாகாவைச் சேர்ந்த அக்கவுண்ட்ஸ் பகுதியில் இருக்கும் 150 குமஸ்தாக்களில் 100 பேர்களுக்கு மேல் கூட்டாக ராஜிநாமா செய்திருக்கிறார்கள். இந்திய சர்க்காரில் வேலை செய்யும் மற்றவர்களைவிட தங்களுக்கு குறைந்த சம்பளம் தரப்படுகிறது என்பது தான் இவர்களுடைய குறை.

## நீத்தார் கடன்

காஞ்சிபுரம் ராஜ வீதியில் சித்தானந்தா வைத்திய சாலை வைத்து நடத்தி வரும், பல தீர்க்க முடியாத பிணிகளைத் தீர்த்துப் புகழ்பெற்றிருக்கும் பிரபல வைத்திய நிபுணராகிய டாக்டர் பி. சிற்சபை அவர்களின் அன்னையார் தோழர் தங்கம்மாள் அவர்கள் 16-6-44-ஆந் தேதி இரவு 10 மணிக்குக் காலஞ் சென்றார். அதை முன்னிட்டு 2-7-44-ஆந் தேதி நீத்தார் நினைவு நாள் எத்தகைய சடங்குமின்றி நடத்தி வைக்கப்பட்டது.

## எல்லைப்புறத்தில் கோதுமைப் பஞ்சம்

பெஷாவாரில் திடீரென கோதுமைப் பஞ்சம் தோன்றியிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு முக்கிய காரணம் வியாபாரிகள் கள்ளத்தனமாக அதிக விலைக்கு மார்க்கட்டில் கோதுமையை விற்பதும், கோதுமையை சர்க்கார் ராணுவத்திற்கு அனுப்புகிறார்கள் என்று காங்கரஸ்காரர்கள் பொய்ப்பிரசாரம் செய்து வருவதும் தான் என்று சொல்லப்படுகிறது.

## மாணவர்கள் அரசியலில் கலந்ததின் பலன்

### பள்ளிகள் 'கிராண்டு' இழந்தன

1942 ஆகஸ்டுக்குப்பின் மாணவ மாணவிகள் சர்க்காருக்கு விரோதமான நடவடிக்கைகளில் கலந்து கொண்ட காரணத்தால், அந்தப்பள்ளிக்கூடங்களுக்கு சர்க்கார் இனி உபகாரச்சம்பளம் ஒன்றும் கொடுக்கமாட்டார்கள் என்று சிந்து சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். இந்த செய்தி கல்வி ஸ்தாபனங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேலம் மாநாட்டுத் தீர்மானங்கள்

ஜூன் 18, 19-ஆம் தேதிகளில் நடைபெற்ற சேலம் மாவட்ட திராவிட இளைஞர் மாநாட்டின் தீர்மானங்கள்:

1. நீதிக் கட்சியையும், தன்மதிப்பியக்கத்தையும், ஒன்றுபடுத்தி திராவிடர் இயக்கமென்று பெயரிட்டு நிதியும், கழகங்களும், தினசரித்தாளும் அமைத்து ஆக்க வேலை செய்ய பெரியார் ஈ. வெ. ரா. வைக் கேட்டுக்கொள்கிறது.

2. பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் உருவச் சிலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்ட சி. என். அண்ணாதுரை எம். ஏ., கே. ஜெகதீசம் செட்டியார் முயற்சியை விரைவில் நடத்தவேணுமாய்த் தோழர்கள் அண்ணாதுரை, ஜெகதீசன் ஆகியவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

3. நீதிக்கட்சியார் சிலர் கஸ்தூரி பாய் காந்தி நிதிக்கு பொருள் கொடுத்து காங்கரஸ் பிரசாரத்துக்கு உதவியதற்கு இம்மாநாடு கண்டிக்கிறது.

4. தென்னாட்டு முஸ்லீம்கள் திராவிடஸ்தான் பிரிவினைக்கு துணை செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறது.

5. தமிழ்நாட்டில் தமிழ் மக்களால் தோற்றுவிக்கப்பட்ட ஆலயங்களிலும், மடங்களிலும் இருக்கும் பொருள்கள் இன்று ஆரிய ஆதிக்கத்திற்கும், ஆரியர் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், பயன்படுத்தப்பட்டு வருவதை அடியோடு நிறுத்தி நம் நாட்டு மக்களுடைய கல்வி, கைத்தொழில், மருத்துவம், விஞ்ஞானம் முதலிய வளர்ச்சிக்கு பயன்படுத்தவேணுமென்று அரசாங்கத்தாரையும், இந்து மதப் பாது காப்பு தலைவர்களையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. திராவிடப் பெண்கள் நிலையம் ஒன்று ஏற்படுத்த இயக்கப் பிரமுகர்களை கேட்டுக்கொள்வதோடு இதற்காக விரைவில் திராவிடப் பெண்கள் மாநாடு கூட்டவும் தலைவர்களை கேட்டுக்கொள்கிறது.

7. செவ்வாய்ப்பேட்டை தேவாங்கபுரத்தில் தபால் ஆபீஸ் ஒன்றை ஏற்படுத்தவேண்டுமாய் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8. சேலம் ஜில்லா போர்டு பாடசாலை உபாத்தியாயர், உபாத்தியாயினிகளை காரணமில்லாமல் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனாவசியமாக மாற்றி குடும்ப வாழ்க்கையைப் பிரித்து வைக்காதிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. S. I. R, M. S. M, ஆகிய இரண்டு ரயில்வேக்களுக்கும் 'தி கிரேட் டிரவிடியன் ரயில்வே' என்று பெயரிடுமாறு சர்க்காரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

10. சேலம் நகரசபைத் தலைவர் பி. இரத்தினசாமி பிள்ளை அவர்களாலும், நகரசபை அங்கத்தினர்களாலும், சேலம் மாவட்ட பிரமுகர்களாலும், சேலம் கல்லூரியை விரிவுபடுத்தி பி. ஏ., வகுப்பு உண்டாக்கி சேலம் மாவட்ட மாணவர்களுக்கு உதவி செய்ததற்கு இம்மாநாடு நன்றி செலுத்துகிறது.

11. தற்காலம் நடக்கும் யுத்தம் நேசக் கட்சி வெற்றியடையுமாறும், அதற்கான உதவிகளையெல்லாம் பொது மக்கள் செய்யுமாறும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## பிறந்த நாள்

சென்னை: திவான்பகதூர் திராவிடமணி ரெட்டமலை ஸ்ரீனிவாசன், எம். எல். சி., எப். எம். யூ. அவர்களது 85-வது பிறந்த நாள் கொண்டாட்டம் 7-7-44 மாலை 6 மணிக்கு, சென்னை பெரியமெட்டு, நேவல் ஆஸ்பிடல்ரோட், கார்பொரேஷன் ஸ்கூலில் திவான் பகதூர் வி. பாஷ்யம் ஐயங்கார், ரிட்டையர்டு ஜட்ஜ் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

## திருத்தம்

சர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் கஸ்தூரிபாய் நிதிக்கு ரூ. 10,000ம் நன்கொடை கொடுத்ததாகத் தெரியவருகிறது என்று 'தினசரி' எழுதியிருந்தது. பின்னர் அதே பத்திரிகை ரூ. 2000ம் தான் கொடுத்திருப்பதாகத் திருத்தம் வெளியிட்டிருக்கிறது.


## மணமகள் தேவை

28 வயதுடைய மருத்துவர்குல ஆணுக்கு (மறு விவாகம்) ஷை வகுப்பில் மணமகள் தேவை. ஆணுக்கு ஏறக்குறைய மாதவருமானம் ரூ. 50-0-0 உள்ளது. வயது 22க்கு மேற்படாத கன்னிப் பெண்ணோ, விதவையோ எழுதவும்.

முகவரி:

மா. பீட்டர், பி. ஏ.,
திராவிடர் கழகம், திருப்பாப்புலியூர்.


## காகித ஏற்றுமதிக்குத் தடை

### பம்பாய் சர்க்கார் உத்தரவு

பம்பாய்: பம்பாய் மாகாணத்திலிருந்து வெளி இடங்களுக்கு சிறைய காகிதங்களை அனுப்புவதை சர்க்கார் கவனித்தது. ஒவ்வொரு பிராந்தியத்துக்கு இவ்வளவு என்று இந்திய சர்க்கார் காகித கோடா நிர்ணயித்து யிருப்பதால், இம்மாதிரியாக ஏற்றுமதி செய்யவேண்டிய அவசியம் இல்லையென்றும், ஆகவே, பம்பாய் மாகாணத்திலிருந்து இந்தியாவிலுள்ள மற்ற பகுதிகளுக்கு கடல் மார்க்கமாகவோ தரை மார்க்கமாகவோ காகிதங்களை அனுப்பக் கூடாதென்றும் பம்பாய் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.


மலிவான விலையில்
ஜூவல் பதிப்பிக்கப்பட்ட
கை கடிகாரங்கள்

சரியான காலம் காட்டக் கூடியதும், நீண்ட நாள் உழைக்கக் கூடிய உறுதியான சாமான்களுடன் கண் கவரும்



அமைப்பும் எட்டு ஜூவல்கள் 15 வருட உத்தரவாத முள்ளதுமான குரோமியம் கேஸ் ரூ. 17, மிகச் சிறந்தது ரூ. 19, லேடி சைஸ் ரூ. 24. ரோல்டு கோல்டு முலாம் பூசப்பட்ட 15 ஜூவல்களுடன் 15 வருட உத்தரவாத முள்ளது ரூ 35, மிகச் சிறந்தது ரூ. 38, லேடி சைஸ் ரூ. 32, ரெக்டேன்குலர் சிறந்த ரகம் ரூ. 30½, ரோல்டு கோல்டு முலாம் பூசப்பட்டது ரூ. 40, மிகச் சிறந்தது ரூ. 47, தபால் செலவு அணா 12 பிரத்தியேகம் 2 கடிகாரங்களுக்கு ஆர்டர் கொடுத்தால் தபால் செலவு இனாம். அத்துடன் 1 பவுண்டன் பேனாவும் இனாம். கேட்லாக் கை வசம் இல்லை.

THE IMPERIAL WATCH Co.,
P. B. No. 12211, Calcutta.



புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்
இயற்றிய

## அழகின் சிரிப்பு

வெளிவந்து விட்டது! விலை ரூ. 1-0-0.

முல்லைப் பதிப்பகம்,
59, பிராட்வே, சென்னை.

# தமிழ் நாட்டுச் செய்திகள்

சேலம்: தென்னிந்திய சித்தவைத்திய சங்கப் பொதுக்கூட்டம் 1-7-44 தேதி நடைபெற்றது. தோழர் எம். கே. முனிசாமி செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட 12 பேர்களடங்கிய நிர்வாகக் குழு ஒன்று தெரிந்தெடுக்கப் பட்டது. தோழர் ஆர். டி. திருவேங்கடம் செட்டியார் மூப்பு என்பதுபற்றிப் பேசினார். தேநீர் விருந்துடன் கூட்டம் முடிவுற்றது.

* *

சீரங்கம்: மருத்துவர்குல சங்கத்தின் அமாவாசைக் கூட்டம் 20-6-44ஆ தேதி தோழர் எஸ். தாத்துவைத்தியர் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆர். கோவிந்தசாமி வைத்தியரைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக்கழகம் ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டது. 16 கமிட்டி அங்கத்தினர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர்

* *

கோலார் தங்கவயல்: சமரச செடியூல்டு வகுப்பினர் கழகத் தேர்தல் கூட்டம் 25-6-44 தேதி தோழர் எம். எஸ். சிவம் தலைமையில் நடைபெற்றது. அது சமயம், தோழர்கள் எஸ். அருள்தாஸ், எ. ராஜேந்திரம் ஆகியவர்கள் காரியதரிசிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். பின், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும் குறிப்பாக கோலார் தங்கவயலிலே ஆதிதிராவிட அச்சயந்திர நிதிக்காக "கிந்தனார்" கதாகாலக்ஷேபத்தை நடத்திக்கொடுத்த நகைச்சுவை அரசு தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு என்றும் மறவாத நன்றியைச் செலுத்துகிறது என்ற தீர்மானம் நிறைவேறியது.

* *

நாகூர்: பொதுஜன ஊழியர் சங்கத்தின் 5வது வருடப் பூர்த்திவிழா தோழர் கெ. பாலைய செட்டியார் தலைமையில் 30-6-44 ஆந்தேதி நடைபெற்றது. அது சமயம் தோழர் வி. தெட்சணாமூர்த்தி அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் கமிட்டி தெரிந்தெடுக்கப்பட்டது. நிர்வாக அங்கத்தனர்களாக 11 பேர் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

திருச்சி: 1-7-44 ஆந்தேதி கருணாநிதி பார்க்கில் தோழர் என். சுந்தரகவுண்டர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் தெ. இ. ரயில்வே ஊழியர் சங்கக் கிளை ஒன்று நிறுவப்பட்டது. நிர்வாகக் கழக உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் தி. ஆ. மாணிக்கவாசகம், டி. ஜியார்ஜ் அம்புதாஸ் ஆகியவர்கள் சங்கத்தின் நோக்கங்களைப் பற்றி பேசினர். பிறகு தோழர் ந. சுப்பராயலு நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* *

சேலம்: சேலம் ஜில்லா மருத்துவர்குல சங்கத்தின் அவசிய பொதுக் கூட்டம் 30-6-44 ஆந் தேதி தோழர் எஸ். வி நாகப்பண்டிதர் தலைமையில் நடைபெற்றது. டாக்டர் கெ. ஆர். ராஜகோபால் பேசினார். சங்கத்தின் ஆண்டு விழாவை வருகிற அமாவாசையன்று சேலம் நகராண்மைக் கழகத் தலைவர் தோழர் பி. ரத்தினசாமி அவர்கள் தலைமையில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. மத்திய கமிட்டிக்கு 4 அங்கத்தினர்கள் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

கரூர்: கரூர் தாலூகா கருநல்விலையில் பெய்ராசி காங்கேய கவுண்டர் மறைவு நாள் நினைவு விழா தோழர் கே. பழனிச்சாமி அவர்களால் பார்ப்பனீயம் நீக்கி கொண்டாடப்பட்டது. பல ஏழைகளுக்கு அன்னமளித்து மாலையில் கரூர் தோழர் கே. வேலாயுதக் கவுண்டர் தலைமையில் ஷையூர் தோழர் எ. குருசாமி அவர்களால் காங்கேயன் சீர்திருத்த நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. ஒன்று நன்கொடையளிக்கப்பட்டது.

## மறைவு

பெரிய அக்ராகரம்: ஈரோடு பெரிய அக்ராகாரம் வாலிபர் முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், இவ்வூர் பிரைமரி முஸ்லிம் லீக்கின் தலைவரும், கோவை மாவட்ட திராவிட இளைஞர் கழக உபதலைவரும், சிறந்த பொது ஜன ஊழியருமான ஜனாப் இ. கு. மு. முகம்மது அப்துல் கனியவர்களின் அருமைத் தந்தையும் பிரபல வியாபாரியும், கொடையாளருமான ஆலிஜனாப் ஈ. கு. முகம்மது இப்ராஹீம் சாயபு அவர்கள் நேற்றுக்காலை 5-30 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவருக்கு 2 ஆண் மக்களும், 7 பெண் மக்களும், மனைவியும் உண்டு.


## சகாயமான விலையில் ஜூவல் பதிப்பிக்கப்பட்ட கை கடிகாரங்கள்

நவீன அமைப்புள்ள கை கடிகாரங்கள். புதிதாக வந்திருக்கின்றன. உறுதியான வேலைப்பாடு. ஒவ்வொரு கடிகாரமும் ஜூவல்களும் லீவர் இயந்திரமும் அமைக்கப்பட்டவை. எல்லாம் ஸ்விஸ் மேட்; சரியான காலம் காட்டக்கூடியவைகள். ஒவ்வொன்றும் 3 வருட உத்தரவாதமுள்ளது.

No. 751

| | |
|---|---|
| குரோமியம் கேஸ் | ரூ. 37-0-0 |
| உயர்ந்த கேஸ் | ரூ. 40-0-0 |
| சிறந்த ரகம் | ரூ. 45-0-0 |

No. 752



| | |
|---|---|
| குரோமியம் கேஸ் | ரூ. 36-0-0 |
| உயர்ந்த கேஸ் | ரூ. 38-0-0 |
| தங்கமுலாம் பூசப்பட்டது | ரூ. 48-0-0 |

No. 753



| | |
|---|---|
| குரோமியம் கேஸ் | ரூ. 38-0-0 |
| உயர்ந்த கேஸ் | ரூ. 42-0-0 |
| தங்கமுலாம் பூசப்பட்டது | ரூ. 50-0-0 |

No. 754



| | |
|---|---|
| குரோமியம் கேஸ் | ரூ. 36-0-0 |
| ரோல்டுகோல்டு (பத்து வருட உத்தரவாதமுள்ளது) | ரூ. 50-0-0 |
| லேடி சைஸ் (பத்து வருட உத்தரவாதமுள்ளது) | ரூ. 60-0-0 |

போஸ்டேஜும், பாக்கிங்கும் அணா 10. 2 கடிகாரங்களுக்கு தபால் செலவு இனாம். ரூ. 100ம் அதற்கு மேலும் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு கமிஷன் ரூ. 6¼ சதவிகிதம் கொடுக்கப்படும். ரூ. 100க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு முன்பணம் ரூ. 10 அனுப்பப்படவேண்டும். சமதப் ஆங்கிலத்தில் எழுதவும்.

CALCUTTA WATCH CO., (Sec. 637) Post Box No. 12203, CALCUTTA.


Edited Printed and Published by N Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutchery Street, Erode